සියලු ම හිමිකම් ඇවිරිණි.
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

දෙවන වාර ඇගැයීම
இரண்டாம் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade 08 | විෂය / பாடம் / Subject: இஸ்லாம் | පත්‍රය / வினாத்தாள் / Paper I,II | පැය / மணித்தியாலம் / Hours 1 |

## பகுதி - I

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

★ **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. இறுதி வேதமாகிய அல்குர்ஆன் அருளப்பெற்ற மாதம்,

   1. சஹ்ரு துல்ஹிஜ்ஜா  2. சஹ்ரு ரமழான்  3. சஹ்ரு ஷவ்வால்

2. ரமழானில் கடைசிப் பத்தில் பள்ளியில் தரித்து நின்று நிறைவேற்றப்படும் அமல்,

   1. இ.ஃதிகாப்  2. ஹிஸ்புல் குர்ஆன்  3. கியாமுல்லைல்

3. இஸ்லாமிய பொருளாதாரத்தின் உயிர் நாடியாகக் கருதப்படுவது,

   1. ஸதகா  2. ஹதிய்யா  3. ஸகாத்

4. அல்லாஹ் மன்னிப்பவனும் இரக்கமுடையவனுமாவான் என்பதைக் குறிக்கும் அரபுப்பதம்,

   1. அல் கபூர் அர்ரஹீம்  2. அல் வதூத் அல் அஸீஸ்  3. அல் கரீம் அர் ரஹீம்

5. 'நிச்சயமாக அல்லாஹ்வுடைய அடியார்களில் அவனுக்குப் பயப்படுவதெல்லாம் ஆலிம்கள் தான்' என்பது,

   1. நபிகளாரின் கூற்று  2. அல்குர்ஆனின் கூற்று  3. ஸஹாபியின் கூற்று

6. ஏழு வசனங்களைக் கொண்டமைந்த ஸூறா அல்மாஊன் அல்குர்ஆனின்,

   1. 96 ஆவது அத்தியாயம்  2. 97 ஆவது அத்தியாயாம்  3.107ஆவது அத்தியாயம்

7. சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்த ஒரு சிறுவனைத் தூக்கிய அபூபக்கர் (ரழி) அவர்கள் 'இவன் நபி (ஸல்) அவர்களையே உருவத்தில் ஒத்திருக்கிறார்' என்றார்கள். அச்சிறுவனின் பெயர்,

   1. ஹஸன் (ரழி)  2. ஹுஸைன் (ரழி)  3. ஸைத் (ரழி)

8. அல்லாஹ் தான் நன்மையை நாடியோருக்குக் கொடுக்கும் பாக்கியம்,

   1. செல்வச் செழிப்பு  2. உடல் ஆரோக்கியம்  3. கல்வி ஞானம்

9. ஸக்காத் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியவர்கள் என அல்குர்ஆன் குறிப்பிடும் கூட்டத்தினரின் எண்ணிக்கை,

1. 8 கூட்டத்தினர்   2. 10 கூட்டத்தினர்   3. 7 கூட்டத்தினர்

10. நாம் பாவங்களைத் தொடர்ந்து செய்து கொண்டே இருந்தால் அல்லாஹ் எம்மை அழித்து விடுவான். அவ்வாறு பாவத்தால் அழிக்கப்பட்ட இரு கூட்டத்தினர்,

1. அவுஸ், கஸ்ரஜ்   2. ஆத் ஸமூத்   3. உஹத், தபூக்

★ **மிகப் பொருத்தமானவற்றை இணைக்குக.**

| | |
|---|---|
| 11. ஸூறா அல் கஹ்ப் | A. தர்தீல் |
| 12. இரவு முழுவதும் நின்று வணங்குதல் | B. கியாமுல் லைல் |
| 13. அல்குர்ஆனைத் திருத்தமாக ஓதுதல் | C. வெள்ளிக்கிழமை |
| 14. ஸலாதுல் இஸ்திஹாரா | D. மகத்தான நற்குணம் |
| 15. ஹுலுகுன் அலீம் | E. உதவி வேண்டித் தொழல் |

★ **பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

16. மறுமை நாளில் ஒரு மு:.மினின் தராசில் அதிக பாரத்தை ஏற்படுத்துவது ................................ ஆகும்.

17. எல்லாக் குழந்தைகளும் பிறக்கும் போது ...................................................... குழந்தைகளாகவே பிறக்கின்றன.

18. அல் குர்ஆனை நம்பி ஓதியவருக்கு அது .................................... அல்லாஹ்விடம் பரிந்து பேசும்.

19. ஒரு முஸ்லிமின் பிரார்த்தனைக்கு அல்லாஹ் மூன்றில் ஏதாவது ஒரு விதத்தில் ....................................................... இருக்க மாட்டான்.

20. தான் விரும்புவதை தன் சகோதரனுக்கும் விரும்பும் வரை உங்களில் ஒருவரும் .......................... ஆக மாட்டார்.



kalvi.lk

## பகுதி – II

### எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

(01) 1. சிறியோர், மூத்தோரிடமிருந்து எதிர்பார்க்கும் **மூன்று** விடயங்களைக் குறிப்பிடுக.

2. நபி (ஸல்) அவர்கள் சிறுவர்கள் மீது அன்பு செலுத்திய முறைகளில் **மூன்றைக்** கூறுக.

3. நபி (ஸல்) அவர்கள் சிறுவர் அபூ ஹப்ஸ் (ரழி) அவர்களுக்கு உணவு உண்ணும்போது பேணிக் கொள்ளுமாறு எடுத்துக்கூறிய அறிவுரைகள் **மூன்றும்** யாவை?

(3+3+6 = 12 புள்ளிகள்)

(02) 1. ஒருவரிடம் கடுமையாகக் காணப்படும் உள்ளம் மென்மையடைய வேண்டுமானால் **மூன்று** விடயங்களைக் கடைபிடிக்குமாறு நபியவர்கள் போதித்தார்கள். அவற்றைக் கூறுக.

2. அனாதைகள் விடயத்தில் ஒரு முஸ்லிம் எவ்வாறு நடந்து கொள்ளல் வேண்டும்? **மூன்று** விடயங்களைக் குறிப்பிடுக.

3. அனாதையைப் பொறுப்பேற்பவரின் சிறப்பு பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸை முழுமையாக எழுதுக.

(3+3+6 = 12 புள்ளிகள்)

(03) 1. 'ஆலிம்கள்' எனப்படுவோர் யாவர்?

2. ஆட்சியாளர்களின் தண்டனைகளுக்கு ஆளாகி சில ஆலிம்களும் இமாம்களும் சிறையில் இடப்பட்டனர். அவர்களுள் **மூவரின்** பெயர்களைக் குறிப்பிடுக.

3. ஆலிம்களை எவ்வாறு கண்ணியப்படுத்தலாம் என்பதற்கு **மூன்று** ஆலோசனைகளை முன்வைக்க.

(3+3+6 = 12 புள்ளிகள்)

(04) 1. வாழ்வில் தவிர்ந்து கொள்ள வேண்டிய துர்க்குணங்கள் **ஆறினைப்** பட்டியற்படுத்துக.

2. துர்க்குணங்களால் வாழ்வில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் **மூன்றினை** எழுதுக.

3. நபி (ஸல்) அவர்களின் நற்குணம் பற்றி அல்குர்ஆன் எவ்வாறு வர்ணிக்கிறது?

(3+3+6 = 12 புள்ளிகள்)

(05) 1. நன்மையான செயல்களும், தீமையான செயல்களும் மனிதனின் உள்ளத்தில் எவ்வகையான உணர்வுகளை ஏற்படுத்துகின்றன?

2. மறுமையில் விசாரணையின் போது கொண்டு வரப்படும் சாட்சியங்கள் யாவை?

3. ஹதீஸில் கூறப்பட்டுள்ள பெரும் பாவங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(4+4+4 = 12 புள்ளிகள்)

(06) 1. நம்பிக்கை நாணயத்தின் வெளிப்பாடுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

2. இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் அல் அமீன், அஸ் ஸாதிக் என அழைக்கப்படுவதற்கான காரணத்தை விளக்குக.

3. மோசடியில் ஈடுபடக்கூடாது என்பதற்கு உதாரணமாக ஓர் சம்பவத்தைக் குறிப்பிடுக.

(4+4+4 = 12 புள்ளிகள்)

(07) 1. பிரயாணத்தின் போது கடைபிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளை விளக்கி எழுதுக.

(12 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457